Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

**Sessions Case No. 49 of 2025**

**Deposition of P.W.9 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சரவணக்குமார் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது ராசிபுரம் கோனேரிப்பட்டி கிராமத்தில் குடியிருந்து ராசிபுரம் புதிய பேருந்து நிலையத்தில் பாலாஜி ஸ்டுடியோ என்ற பெயரில் போட்டோ ஸ்டுடியோ வைத்திருக்கிறேன். 12.05.2023ம் தேதி ராசிபுரம் காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சேட்டு என்கிற தங்கராஜ் என்பவரை புகைப்படம் எடுக்க வேண்டும் என்று கூப்பிட்டார். அதன்படி, ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்துபோன சேட்டு என்கிற தங்கராஜை புகைப்படம் எடுத்தேன். அதன்பிறகு, இவ்வழக்கு சம்பவயிடமான ராசிபுரம் எல்.ஐ.சி. காலணி இறந்துபோன சேட்டு என்கிற தங்கராஜ் என்பவரின் வீட்டிற்கு அருகே சென்று புகைப்படம் எடுத்தேன். காவல் நிலையத்தில் இருந்த எதிரி விஜயகுமார் என்பவரையும் புகைப்படம் எடுத்தேன். புகைப்படங்களை பிரிண்ட் எடுத்தும், சிடி போட்டும் காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரியை எங்கிருந்து எந்த தேதியில் காவல் நிலையத்திற்கு கூட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 49 of 2025**

**Deposition of P.W.10 witness for Prosecution**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : மருத்துவர். காயத்ரி | | Taluk | : |
| Father's/ Husband's Name | : | | Calling | : |
| Village | : | | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது திருவள்ளூர் மருத்துவகல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிகிறேன். 12.05.2023ல் ராசிபுரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்தபோது இரவு 10.05 மணிக்கு சேட்டு என்கிற தங்கராஜ் (60) என்பவரை அவரது உறவினர் ஜெயபால் என்பவர் சிகிக்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அவரை அவரது வீட்டில் வைத்து தெரிந்த நபர் தாக்கி கொலை முயற்சி செய்ததாக சொன்னார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து காயங்களுக்கு சிகிச்சை அளித்தேன். நோயாளி வரும்போது சுய நினைவுடன் இல்லை. மூச்சு விடுவதற்கு சிரமப்பட்டார். அவரை பரிசோதித்த போது வலது பக்க நெஞ்சிற்கு மேற்பகுதியிலும், நடுநெஞ்சின் கீழ்பகுதியிலும் இரத்த காயங்கள் இருந்தது. அவரை மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பரிந்துரை செய்தேன். அவ்வாறு கொண்டுபோவதற்கு முன்பே இரவு 10.40 மணிக்கு ராசிபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து சிசிக்சை பலனின்றி இறந்துவிட்டார். நான் அவரது இறப்பை உறுதி செய்து பிரேதத்தை மருத்துவமனை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.6 ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

இறந்து போனவரை சிகிச்சையில் சேர்த்தவுடன் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்துவிட்டேன். தகவல் கிடைத்தவுடன் உடனே போலீசார் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டடார். அதன்பிறகு தான் நான் பிரேதத்தை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். அவரை சிகிச்சையில் சேர்த்த நபர் இறந்துபோனவரை எந்த ஆயுதத்தால் தாக்கினார் என்று சொல்லவில்லை. என்னிடம் தாக்கப்பயன்படுத்திய ஆயுதத்தை காட்டி ஆய்வாளர் விசாரிக்கவில்லை.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.